**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| | | |
|---|---|---|
| **O.S. No. 227/2014** | **Date : 14.08.2024** | **DW5** |
| Name: சம்பூர்ணம் | W/o. **ஜோதிலிங்கம்** | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

**வாதிகள் பாகப்பிரிவினை கோரிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். பாகப்பிரிவினை எதுவும் ஏற்படாமலேயே எனது செல்வாக்கை பயன்படுத்தி** Ex B9 **பட்டா எண்.** 1170 **வாங்கியுள்ளேன் என்றால் தவறு. பாகப்பிரிவினை எந்த ஆண்டு ஏற்பட்டுள்ளது என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம் சொல்லியுள்ளேன்** 13.10.1982 **ஆகும். உஙகளின் பதில் உரையிலும், முதல் விசாரணையின் போதும்** 13.10.1982 **அன்று பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று நான் கூறவில்லை தற்போதுதான் முதல் முறையாக தெரிவிக்கிறேன் அதனால் இந்த சங்கதி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.** Ex B9 **பட்டா** 2017 **யில் என் பெயருக்கு மாற்றப்பட்டது.** Ex B9 **பட்டா மாற்றம் செய்யக்கோரிய மனுவினை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை.** Ex B10 **சேலம்** DRO **வில் பிறப்பிக்கப்பட்ட** 29.03.2022 **ந.க.**19554/2019 **இ** 3 **உத்தரவில் பார்வையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.** Ex B10 **யில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதை படித்து பார்த்தால்தான் என்னால் சொல்லமுடியும் என்கிறார். அந்த உத்தரவை தெரிந்து கொண்டே வேண்டுமென்றே சொல்ல மறுக்கிறேன் என்றால் சரியல்ல.** Ex B10 **யில் வழக்கு நிலுவையில் இருக்கும் காரணத்தினால் உத்தரவு எதுவும் பிறப்பிக்க முடியாது என்று அந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.** RDO **வின் உத்தரவை** Ex B10 **யில் தாக்கல் செய்துள்ளீர் அந்த உத்தரவு பிறப்பிப்பதற்காக கொடுக்கப்பட்ட மனுவின் நகலை இந்த வழக்கில்தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை.** Ex B10 **யில்** DRO **பிறப்பித்த உத்தரவு இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு தான் என்றால் சரிதான்.** 05.10.2023 **அன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ்**

பெறப்பட்ட தகவலில் பிரிவு 2(f)யின் கீழ் தங்கள் கோரிக்கை வராது என்று தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. இது நான் ஓய்வு பெற்ற வருவாய் துறை அதிகாரி என்ற செல்வாக்கில் பெறப்பட்டது என்றும், அதனால் RTI மூலம் நான் பெற்று ஒப்படைத்ததாக கூறும் அ பதிவேடு FMB ஆகீயவற்றிற்கு சட்டவலு இல்லை என்றால் சரியல்ல. Ex B12 ஆவணத்தில் பொது தகவல் அலுவலர் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 15.02.2024 என்று Ex B12 லில் போடப்பட்டுள்ள தேதியானது அது தயாரித்த அலுவலரின் சுருக்கொப்பத்திற்கு கீழ் உள்ள தேதிதானே தவிர பொது தகவல் அலுவலர் கையொப்பம் செய்த தேதி அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் என் செல்வாக்கை பயன்படுத்தி வாங்கியதால் அவை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் மூல ஆவணங்களின் அடிப்படையில் இல்லாவிட்டால் அவை செல்லாது என்பது Deputy Collector ஆக பணிபுரிந்த எனக்கு தெரியும் என்றால் தெரியும். துரைசாமி பிள்ளையின் இறுதி வயதிற்கு பின் எந்த மூல ஆவணமும் இந்த சொத்துக்கள் குறித்து இல்லை என்றால் தவறு.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது**

ஒம்/—சம்பூர்ணம்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

எஸ்.பிரியா
சார்பு நீதிபதி, மேட்டூர்.